M

முதல் இடைப் பருவத் தேர்வு - மார்ச் 2021

பன்னிரெண்டாம் வகுப்பு பதிவு எண் | | | | | | | |

கணக்குப்பதிவியல்

நேரம்:1.30 மணி மதிப்பெண்கள்:50

**I. சரியானவிடையைத் தேர்சு செய்யவும்.** 10×1=10

1) பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்
அ) நட்டம் ஆ) ரொக்கம்
இ) முதல் ஈ) இலாபம்

2) கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
அ) மொத்த கடனாளிகள் கணக்கு ஆ) மொத்த கடனீந்தோர் கணக்கு
இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

3) நிலை அறிக்கை ஒரு
அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை
ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு.
ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

4) உயில் கொடை ஒரு
அ) வருவாயினச் செலவு ஆ) முதலின செலவு
இ) வருவாயின வரவு ஈ) முதலின வர்வு

5) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
அ) பெயரளவுக் கணக்கு ஆ) சொத்துக் கணக்கு
இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

6) கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது முதல் மீது வட்டி
அ) வழங்கப்படுவ்தில்லை ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

7) ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள்
இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்

8) கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
அ) சம்பளம் ஆ) கழிவு
இ) கடன் மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி

9) ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாப விகிதமாக கருதப்படுவது
அ) சராசரி இலாபம் ஆ) சாதாரண இலாப விகிதம்
இ) எதிர்நோக்கும் இலாப விகிதம் ஈ) இவைகளில் ஏதுமில்லை

10) பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து ஈ) நற்பெயரினை வாங்க முடியாது.

**II. எவ்வயேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண்.17க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.)** 5×2=10

11) நிலை அறிக்கை என்றால் என்ன?

12) பின்வரும் விவரங்களிலிருந்து கடன் கொள்முதலை கணக்கிடவும்.

| விபரம் | ரூ |
|---|---|
| தொடக்கடனீந்தோர் | 3,40,000 |
| கொள்முதல் திருப்பம் | 40,000 |
| கடனீந்தோருக்குச் செலுத்தியது | 9,00,000 |
| இறுதிக் கடனீந்தோர் | 3,80,000 |

13) இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின ,வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.

14) பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செல்வினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் என காட்டவும்

| | |
|---|---|
| 1.4.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 5,500 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுதுபொருள்கள் | 12,600 |
| 31.3.2019 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 6,000 |

15) மன்னன் மற்றும் ரமேஷ் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:2 என்ற இலாபவிகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018 ஏப்ரல் 1- அன்று அவர்களின் முதல் முறையே மன்னன் ரூ.1,50,000 மற்றும் ரமேஷ் ரூ.1,00,000 ஆகும். அவர்களின் நடப்புக் கணக்குகள் ரூ.25,000 மற்றும் ரூ.20,000 என வரவிருப்பைக் காட்டியது. 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிட்டு அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

16) பின்வரும் விவரங்களிலிருந்து கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| ஆண்டு | முடிவு | தொகை |
|---|---|---|
| 2015 | இலாம் | 5,000 |
| 2016 | இலாபம் | 8,000 |
| 2017 | நட்டம் | 3,000 |
| 2018 | இலாபம் | 6,000 |

17) உயர் இலாபம் என்றால் என்ன?

III. **எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண்.24க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.)**

**5×3=15**

18) பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையை கண்டறியவும்.

| விபரம் | ரூ. |
|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனைத் திருப்பம் | 35,000 |
| வாராக்கடன் | 15,000 |
| 2018 டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,60,000 |

19) காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று தொடர்விளையாட்டுப் போட்டி நிதி | 90,000 |
| 2018 ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு | 90,000 |
| தொடர்விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி செலவுகள் | 60,000 |

20) பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும். அந்த மன்றம் 2016-2017 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா ரூ.40,000. இதில் 2015-2016 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ரூ.5,000 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ரூ.3,000 உள்ளடங்கியுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ரூ.1,000 இன்னும் பெற வேண்டியுள்ளது.

21) கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ரூ.2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்

M



பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி காலமுறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும் அவர்

(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்

(ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்

(iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

22) பின்வரும் விவரங்களிலிருந்து உயர் இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

அ) நிறுவனத்தின் மொத்த சொத்துக்கள் ரூ.5,00,000

ஆ) நிறுவனத்தின் பொறுப்புகள் ரூ.2,00,000

இ) இவ்வகைத் தொழில்களின் சாதாரண இலாப விகிதம் 15%

ஈ) நிறுவனத்தின் சராசரி இலாபம் ரூ.60,000

23) நிலை முதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

24) இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமை பெறா ப்திவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

**IV. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **3×5=15**

25) அ) ஸ்ரீதேவி நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 4 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

அ) டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018-ன் இலாபங்கள் முறையே ரூ. 1,75,000, ரூ.1,50,000 மற்றும் ரூ.2,00,000

ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ.45,000 சேர்ந்துள்ளது.

இ) 2017 ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ரூ.30,000 அதிகமாக மதிப்பிடப் பட்டது.

**(அல்லது)**

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

அ) சாதாரண இலாப விகிதம் 10%

ஆ) கடந்த4ஆண்டுகளின் இலாபங்கள் ரூ.27,000, ரூ.40,000 ரூ.50,000 மற்றும் ரூ.45,000

| விபரம் | தொடக்க இருப்பு | இறுதி இருப்பு |
|---|---|---|
| கடனாளிகள் | 60,000 | 55,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 5,000 | 1,000 |
| கடனீந்தோர் | 25,000 | 28,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 2,000 | 3,000 |

| பிற தகவல்கள் | ரூ. |
|---|---|
| கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது. | 1,30,000 |
| வாடிக்கையாளருக்கு அளித்த தள்ளுபடி | 5,500 |
| கடனீந்தோருக்குச் செலுத்திய ரொக்கம் | 70,000 |

இ) சராசரி பயன்படுத்தப்பட்ட முதல் ரூ.3,00,000

26) அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கடனாளிகள் கணக்கு மொத்தக் கடனீந்தோர் கணக்கு. பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு கணக்கு தாரித்து கடன் விற்பனை மற்றும் கடன் கொள்முதல் கண்டறியவும்.

| | |
|---|---|
| சரக்களித்தோர் வழங்கிய தள்ளுபடி | 3,500 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குரிய ரொக்கம் செலுத்தியது | 7,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்கான ரொக்கம் பெற்றது | 14,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 1,200 |
| வாராக்கடன் | 3,500 |

**(அல்லது)**

ஆ) கீழ்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | சம்பளம் | 20,000 |
| கை ரொக்கம் | 14,000 | வாடகை | 24,000 |
| வட்டிப் பெற்றது | 5,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| சந்தா | 55,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 |
| உயில் கொடை | 48,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |
| அறைகலன் விற்றது | | இருப்பு கீ/இ | |
| (ஏட்டு மதிப்பு ரூ.17,000) | 16,000 | கை ரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

27) அ) கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து மதுரை அன்னை தெரசா மகளிர் மன்றத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விபரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.1.2018) | 2,000 | தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 1,500 |
| வங்கி இருப்பு (1.1.2018) | 3,000 | சந்தா பெற்றது | 8,500 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 500 | அறைகலன் வாங்கியது | 6,000 |
| எழுதுபொருள் வாங்கியது | 6,000 | செய்தித்தாள்கள் வாங்கியது | 700 |
| தணிக்கைக் கட்டணம் செலுத்திய்து | 2,000 | அறைக்லன் மீதான தேய்மானம் | 900 |
| நுழைவுக் கட்டணம் பெற்றது | 3,000 | ரொக்க இருப்பு (31.12.2018) | 2,500 |
| பல்வகைச் செலவுகள் | 6,000 | போக்குவரத்துச் செலவுகள் | 1,000 |
| உதவித் தொகை அளித்தது | 2,000 | அறைகலன் விற்றது | 4,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 2,000 | | |

(அல்லது)

ஆ) ஆகாஷ், பாலா, சந்துரு மற்றும் டேனியல் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள் கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

i) ஆகாஷ் என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார் அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.

ii) பாலா ஒவ்வொரு மாதமும் ரூ.3,000 எடுத்துக் கொள்கிறார் ஏனைய கூட்டாளிகள் பாலாவிடம் ஆண்டுக்கு 8% எடுப்புகள் மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால் பாலா அதனை ஒப்புக் கொள்ளவில்லை.

iii) ஆகாஷ் இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக் கொள்ளவில்லை.

iv) டேனியல் தனது முழு நேரத்தையும் தொழிலில் செலவிடுவதால் அவர் ஒவ்வொரு மாதமும் ரூ.10,000 ஊதியம் வேண்டுமென்று கோருகிறார்.

v) சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் ரூ.50,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 12% வேண்டுமென்று கோருகிறார்.

******************